

# தி.மு.க. இளைஞர் அணி

## என் உயிரினும் மேலான..!

## கலைஞர் நூற்றாண்டு பேச்சுப் போட்டி பயிற்சி

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டை முன்னிட்டு, கழகத் தலைவர் அவர்களின் வழிகாட்டுதலுடன் தி.மு.க. இளைஞர் அணி நடத்திய **'என் உயிரினும் மேலான..!'** என்ற பிரமாண்ட பேச்சுப் போட்டியில் 17 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர். முதல் கட்டமாக, மாவட்ட அளவில் நடைபெற்ற பேச்சுப் போட்டியில் 913 பேர் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். அடுத்த கட்டமாக மண்டல அளவிலான போட்டிகள் நடைபெறவுள்ள நிலையில் மாவட்ட அளவில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு திராவிட இயக்கப் பேச்சாளர்களைக்கொண்டு பயிற்சி அளிக்கப்பட உள்ளது.

29.09.2024 ஞாயிறு அன்று நடைபெறும் இந்தப் பயிற்சி முகாம் குறித்த விவரம் வருமாறு:

**29-09-2024, ஞாயிற்றுக்கிழமை**

| வ. எண் | வருவாய் மாவட்டம் | பயிற்சி நடைபெறும் இடம் | பயிற்சியாளர்கள் | நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர்கள் |
|---|---|---|---|---|
| 1 | சென்னை, செங்கல்பட்டு | ஜெயின் மகளிர் கல்லூரி, பேருந்து நிலையம் அருகில், தியாகராய நகர், சென்னை-17. | கோவி.செழியன், மருத்துவர் எழிலன், கோவி.லெனின், மருத்துவர் யாழினி, ஜீவசகாப்தன் | எஸ்.ஜோயல் |
| 2 | விழுப்புரம், கள்ளக்குறிச்சி, கடலூர், புதுச்சேரி | சூர்யா கல்விக் குழும கல்லூரி, விக்கிரவாண்டி, விழுப்புரம்-52. | பொன். முத்துராமலிங்கம், மதுரை பாலா, சுகுணா திவாகர், டான் அசோக், சூர்யா கிருஷ்ணமூர்த்தி | ப.அப்துல் மாலிக் |
| 3 | காஞ்சிபுரம், திருவள்ளூர், இராணிப்பேட்டை, திருவண்ணாமலை, வேலூர் | எ.வ.வேலு மகளிர் மேல்நிலைப் பள்ளி, வேட்டவலம் சாலை, திருவள்ளுவர் நகர், திருவண்ணாமலை-1. | நாஞ்சில் சம்பத், சி.வி.எம்.பி.எழிலரசன், உமா, சௌமியன், மகிழ்நன் | க.பிரபு |
| 4 | நாமக்கல், சேலம், தருமபுரி, கிருஷ்ணகிரி, திருப்பத்தூர் | சப்தகிரி பொறியியல் கல்லூரி, சேலம்-பெங்களூரு நெடுஞ்சாலை, பெரியன்னஹள்ளி, தருமபுரி-5. | வழக்கறிஞர் அருள்மொழி, வே.மதிமாறன், அமுதரசன், பத்மப்ரியா, செந்தில்வேல், தமிழ் காமராசன் | பி.எஸ்.சீனிவாசன் |
| 5 | கரூர், திருப்பூர், கோவை, நீலகிரி, ஈரோடு | மகரிஷி வித்யா மந்திர் பள்ளி, ஈங்கூர், பெருந்துறை, ஈரோடு-52. | பேராசிரியர் சுப.வீரபாண்டியன், வழக்கறிஞர் சரவணன், மதிவதனி, இந்திரகுமார் தேரடி, பொள்ளாச்சி சித்திக் | கே.இ.பிரகாஷ் |
| 6 | அரியலூர், பெரம்பலூர், திருச்சி, திருவாரூர், புதுக்கோட்டை, தஞ்சாவூர், மயிலாடுதுறை, நாகப்பட்டினம், காரைக்கால் | கரந்தை தமிழ்ச் சங்கம், தஞ்சாவூர்-கும்பகோணம் நெடுஞ்சாலை, சுந்தரம் பிள்ளை நகர், தஞ்சாவூர்-2. | முனைவர் சபாபதி மோகன், கவிதைப்பித்தன், வழக்கறிஞர் பரந்தாமன், மருத்துவர் ஹபீஸ், விஜயபாஸ்கர் | நா.இளையராஜா, சி.ஆனந்தகுமார் |
| 7 | திண்டுக்கல், மதுரை, தேனி, விருதுநகர், சிவகங்கை | அமெரிக்கன் கல்லூரி, அழகர் கோவில் பிரதான சாலை, தல்லாக்குளம், மதுரை-20. | கம்பம் செல்வேந்திரன், டி.செங்குட்டுவன், புதுக்கோட்டை விஜயா, மருத்துவர் ஷஃபி சுலைமான், சூர்யா சேவியர், 'புதுகை பூபாளம்' பிரகதீஸ்வரன், மில்டன் | ஜி.பி.ராஜா |
| 8 | திருநெல்வேலி, கன்னியாகுமரி, இராமநாதபுரம், தென்காசி, தூத்துக்குடி | கீதாஜீவன் மெட்ரிகுலேஷன் பள்ளி, போல்பேட்டை, புதிய பேருந்து நிலையம் அருகில், தூத்துக்குடி-2. | கடலூர் புகழேந்தி, எஸ்.கே.பி.கருணா, கவிஞர் சல்மா, வழக்கறிஞர் தமிழன் பிரசன்னா, வழக்கறிஞர் ராஜீவ்காந்தி, வரவணை செந்தில், ராஜகம்பீரன் அப்பாஸ் | இன்பா ஏ.என்.ரகு |

**பயிற்சியில் கலந்துகொள்வோர் கவனத்திற்கு**

* பயிற்சியில் கலந்துகொள்ள வருபவர்கள், கல்லூரி / அலுவலக அடையாள அட்டை, ஆதார் கார்டு போன்ற ஏதேனும் ஓர் அடையாள அட்டையை எடுத்து வர வேண்டும். * பயிற்சி காலை 9 மணி முதல் மதியம் 1 மணி வரை நடைபெறும். * காலை மற்றும் மதிய உணவு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. * பயிற்சி தொடங்கும் நேரத்தில் பங்கேற்பாளர்கள் அரங்கத்தில் இருக்கவேண்டும். * பயிற்சியில் கலந்துகொள்ளும் மாணவர்கள் தங்களுடன் பெற்றோர் அல்லது உறவினர் ஒருவரை துணைக்கு அழைத்து வரலாம்.

**அன்பகம்**, சென்னை – 18.
நாள் : 25–09–2024.

கலைஞர் 100 1924 - 2023

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர், தி.மு.க. இளைஞர் அணி

---

### மதச்சார்பின்மை குறித்து கருத்து தெரிவித்த

# ஆளுநர் ஆர்.என். ரவியை பதவி நீக்கம் செய்க!

## 'இந்தியா' கூட்டணிக் கட்சித் தலைவர்கள் கடும் கண்டனம்!

டெல்லி, செப். 27-

மதச்சார்பின்மை குறித்து சர்ச்சை கருத்து தெரிவித்த தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என்.ரவிக்கு இந்தியா கூட்டணி கட்சிகள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளன. நிகழ்ச்சி ஒன்றில் பேசிய ஆளுநர் ஆர்.என்.ரவி மதச்சார்பின்மை என்பது ஐரோப்பிய தத்துவம் என்றும் அது இந்தியாவுக்கு தேவையில்லை என்றும் கருத்து தெரிவித்தார்.

இவரது பேச்சு சர்ச்சையை ஏற்படுத்திய நிலையில் ஆளுநருக்கு கண்டனம் தெரிவித்துள்ள முன்னாள் ஒன்றிய அமைச்சர் ப.சிதம்பரம் திருவள்ளுவருக்கு காவி அங்கியை அணிவித்த ஆளுநர் மதச்சார்பின்மை என்பது ஐரோப்பிய கொள்கை என்றும் அதற்கு இந்தியாவில் இடமில்லை என்றும் இப்போது கண்டு பிடித்துள்ளார் என்றும் விமர்சனம் செய்துள்ளார்.

கூட்டாட்சி முறை என்பதும் ஐரோப்பிய கொள்கையாகவே இருந்தது என்றும் அப்படி என்றால் கூட்டாட்சி முறைக்கு இந்தியாவில் இடமில்லை என்று அறிவித்து விடலாமா என்றும் கேள்வி எழுப்பியுள்ளார். மதச்சார்பின்மை குறித்து ஆளுநர் ரவிக்கு என்ன தெரியும் என்று இந்திய கம்யூனிஸ்ட் பொதுச்செயலாளர் டி.ராஜாவும் வினவி உள்ளார். தமிழ்நாடு போன்ற முக்கியமான மாநிலத்திற்கு ரவியை ஆளுநராக நியமித்தது வெட்கக்கேடான ஒன்று என்று மார்க்சிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் பிருந்தா காரத் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இதனிடையே தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என். ரவியை பதவி நீக்கம் செய்ய வேண்டும் என காங்கிரஸ் பொதுச்செயலாளர் ஜெய்ராம் ரமேஷ் வலியுறுத்தி உள்ளார். அரசியல் அமைப்பு சட்டத்தை மீறி செயல்படும் ஆளுநர் பிரதமரின் கருத்தை எதிரொலிக்கிறார் என்றும் அவரது கருத்தை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் ஜெய்ராம் ரமேஷ் தெரிவித்துள்ளார். இது போன்றதொரு எதிர்ப்பை பதிவிட்டுள்ள காங்கிரஸ் எம்.பி. பிரியங்கா சதுர்வேதி, ஆளுநர் பதவி கூட பிரிட்டிஷ் காலத்தில் உருவாக்கப்பட்டு இந்திய அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

ஆனால், மோடி அரசு அதனை தவறாக பயன்படுத்தி வருவதாக தமிழ்நாடு ஆளுநரின் கருத்துக்கு பதிலடி கொடுத்துள்ளார். ஆங்கிலேயர் அறிமுகப்படுத்திய ஆளுநர் பதவி இந்தியாவுக்கு இனி தேவையில்லை என்று காங்கிரஸ் மூத்த தலைவர் பவன் கேரா கூறியுள்ளார். மதச்சார்பின்மை தொடர்பான தமிழ்நாடு ஆளுநரின் கருத்து உச்சநீதிமன்ற மற்றும் இந்திய அரசியல் அமைப்பை கேலிக்குள்ளாக்கி இருப்பதாக உச்சநீதிமன்ற மூத்த வழக்கறிஞர் பிரசாந்த் பூஷன் தெரிவித்துள்ளார்.



திருச்சி சத்திரம் பேருந்து நிலையத்திலிருந்து மத்திய பேருந்து நிலையம் வரையிலான வட்ட பேருந்து சேவையை பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி கொடி அசைத்து துவக்கி வைத்தார். இந்நிகழ்வில் மாவட்ட ஆட்சித்தலைவர் மா.பிரதீப் குமார், மண்டல குழு தலைவர், மாநகரக் கழகச் செயலாளர் மு.மதிவாணன், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் திருச்சி மண்டலத்தின் பொது மேலாளர் அ.முத்துகிருஷ்ணன், துணை மேலாளர் வணிகம் ஆர்.சாமிநாதன், கோட்ட மேலாளர் புகழேந்திராஜ், பகுதி கழகச் செயலாளர் மோகன், மாமன்ற உறுப்பினர் மணிமேகலை, வட்டக்கழகச் செயலாளர் சங்கர், கழக நிர்வாகிகள், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தின் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள். பொதுமக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.